# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு ஜீன் சனிக் கிழமை 15ம் நாள் சாட்சியாகிய லட்சுமி என்கின்ற ஜெயலட்சுமி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி.மம்தா, Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி என்கின்ற ஜெயலட்சுமி | வயது | 27 |
| க/பெ. | ராஜேஷ்குமார் | இனம் | பெண் |
| கிராமம் | சுவால்பேட்டை | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.10/2023**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆஜர்.)

<u>குறுக்கு விசாரணை 15.06.2024 ம.சா.1</u>

1. எனது அப்பாவிற்கு 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். நான் 2 வது மகள் என்றால் சரிதான். எனது அக்கா திருமணம் ஆகி சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தங்கை எனது தந்தையுடன் உள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தந்தையின் முகவரி அட்டை என்றால் சரிதான்.

2. தற்போதும் எனது தந்தை மொத்த காய்கறி வியபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது தந்தை டிராவல்ஸ் நடத்தி வருகிறார் என்றால் நடத்தி வந்தார் தற்போது இல்லை. எனது தந்தை தற்போதும் டிராவல்ஸ் தொழில் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. எனது தந்தை தங்கும் விடுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

3. எனது தந்தை பைனாஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது தந்தை வி.எம்.ஆர். என்ற பெயரில் டிரஸ்ட் நடத்தி வருகிறார் என்றால் தற்போது இல்லை. எனது தந்தை ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. எனது தந்தை அரக்கோணத்தில் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை அரக்கோணத்தில் செல்வாக்கு மிக்கவர் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரர் அவருடைய பெற்றோருக்கு ஒரே மகன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் பெற்றோருக்கு 75 வயது இருக்கும் என்றால் 60 வயதுக்குமேல் இருக்கும். எதிர்மனுதாரரின் சென்னையில் உள்ள வீடு இரண்டு தளங்கள் கொண்டது என்றால் சரிதான். நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன் என்றால் சரிதான்.

5. திருமணத்திற்கு பிறகு நான் சென்னை குரோம்பேட்டையில் 3 மாத தொழில் படிப்பு படித்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு சாக்லேட் தயாரிப்பதற்காக தொழில் படிப்பு படித்தேன் என்றால் ஆன்லைன் மூலம் 2 மணி நேரம் படித்தேன். நலங்கு மாவு தயாரிக்கும் படிப்பும் படித்தேன் என்றால் இல்லை.

6. திருமணத்திற்கு பிறகு நான் டேட்டா என்ட்ரி வேலை செய்தேன் என்றால் 10 நாட்கள் செய்தேன். நான் தற்போது அந்த வேலையை செய்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்னையில் வசித்து வந்தபோது நீயூரோ கிட்ஸ் என்ற பள்ளியில் வேலை செய்தேன் என்றால் இல்லை. நான் பள்ளியில் வேலை செய்துவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் திருமணத்திற்கு பிறகு என் கணவருடன் வசித்து வரும்போது கூட்டு குடும்பமாக இருந்தேன் என்றால் சரிதான். சிறிது நாட்கள் கழித்து நான் மாடியிலும், எதிர்மனுதாரரின் பெற்றோர் கீழ் தளத்திலும் தனித்தனியாக வசித்து வந்தோம் என்றால் எதிர்மனுதாரரின் பெற்றோர் தான் தனியாக வைத்தார்கள். நான், எதிர்மனுதாரரிடம் பெற்றோரை தனியாக விட்டுவிட்டு வந்தால் தான் வசிப்பபேன் என்று சொன்னதால் வாடகைக்கு இருந்தவரை காலி செய்துவிட்டு, தனிக்குடித்தனம் வைத்தார்கள் என்றால் சரியல்ல.

8. தல தீபாவளி எங்கு கொண்டாடினோம் என்றால் எதிர்மனுதாரர் அவர் வீட்டில் தான் கொண்டாட வேண்டும் என்று பிரச்சனை செய்ததால் அங்கு கொண்டாடினோம். தல தீபாவளி மற்றும் பின் வந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் அரக்கோணத்தில் தான் கொண்டாடினோம் என்றால் சரியல்ல. சென்னையில் நான் வசித்து வந்தபோது தாம்பத்தியத்தில் பிரச்சனை இருப்பதாக மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் நானாக தான் சென்றேன். எதிர்மனுதாரர் அழைத்து செல்லவில்லை.

9. எதிர்மனுதாரர் தான் சென்னையில் வளர்மதி என்ற மருத்துவரிடம் அழைத்து சென்றார் என்றாலும், அரக்கோணத்தில் தேன்மொழி என்ற மருத்துவரிடம் எனது தந்தை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. எனக்கு தான் தாம்பத்தியத்தில் பிரச்சனை உள்ளது என்றாலும் எதிர்மனுதாரருக்கு பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை போனில் மிரட்டியதற்கு ஆதாரம் உள்ளது என்றால் எதிர்மனுதாரர் தான் என்னை உடல் ரீதியாக கொடுமை செய்தார்.

10. எதிர்மனுதாரர், என்னை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமை செய்யவில்லை என்றாலும், நான் எதிர்மனுதாரரை குழந்தை வேண்டும் என்றால் உனது அம்மாவிடம் பெற்றுக்கொள் என்று பேசினேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரரை கொடுமை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு மது, புகைப்பழக்கம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான், எதிர்மனுதாரருடன் வசித்து வந்த காலம் கொரனா காலம் என்பதால் மதுகடைகள் இல்லை என்றால் 2018 ம் வருடம் கொரனா கிடையாது. எனக்கு டிவி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது பிடிக்கும் என்றால் சரிதான். நான் எத்தனை டிவி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன் என்றால் 3 முதல் 4 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். என்னை யார் டிவி நிகழ்ச்சிகளுக்கு அழைத்து சென்றார்கள் என்றால் நான் தனியாக தான் சென்றேன்.

12. 06.10.2019 ம் தேதி ஜெயா டிவியில் நடைபெற்ற கில்லாடி ராணி என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த நிகழ்ச்சிக்கான படப்பிடிப்பு காலை 8 மணிமுதல் மாலை 7.30 மணிவரை நடந்தது என்றால் சரிதான். அந்த நிகழ்ச்சியில் எனது கணவரும் கலந்துகொண்டார் என்றால் என்னை தொல்லை செய்து என்னுடன் வந்தார். அந்த நிகழ்ச்சிக்கு எதிர்மனுதாரர் தான் அழைத்து சென்றார் என்றால் சரியல்ல.

13. நான் அந்த நிகழ்ச்சியில் எனது தந்தைக்கு பிறகு எனது கணவரை தான் பிடிக்கும் என்று தெரிவித்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்

குடித்துவிட்டு கொடுமை செய்து இருந்தால் நான் அந்த நிகழ்ச்சியில் எதிர்மனுதாரரை பிடிக்கும் என்று சொல்லியிருக்கமாட்டேன் என்றால் எதிர்மனுதாரர் தான் தொந்தரவு செய்து அவ்வாறு சொல்ல சொன்னார். அந்த நிகழ்ச்சியில் என்ன சொல்ல வேண்டும் என்று எதிர்மனுதாரர் சொன்னார் என்று தெரிவிப்பது பொய் என்றால் சரியல்ல. உண்மை இல்லை என்பதால் தான் எனது மனு மற்றும் முதன்மை சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

14. தற்போது ஞாபகம் வருவதால் சொல்கிறேன். சென்னையில் நான் சென்ற அனைத்து டிவி நிகழ்ச்சிகளுக்கும் எதிர்மனுதாரர் தான் என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. 18.11.2022 ம் தேதி நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று எனது பொருட்களை 13 பையில் எடுத்து வந்தேன் என்றால் 10 பையில் எடுத்துவந்தேன். நான் எனது நகைகளையும் எடுத்து வந்து விட்டேன் என்றால் நகைகள் எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் தான் உள்ளது. நான் தனிக்குடித்தனம் இருந்ததால் நகைகளை எடுத்து வந்து விட்டேன் என்றாலும் தற்போதும் நகைகள் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. நான் அரக்கோணத்தில் இருந்து சென்னைக்கு சென்று எனது பொருட்களை எடுத்து வந்துள்ளபோது நகையை மட்டும் எடுத்து வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15. சமுக வலைதளங்களில் விருப்பம் உள்ளது என்றால் சரிதான். நான் சமுக வலைதளங்களில் வீடியோ போடுவேன் என்றால் இன்ஸ்டாவில் போடுவேன். எனது வீடியோக்களுக்கு கமன்ட்ஸ் வரும் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் தெரிவிப்பேன் என்றால் எனக்கு தெரிந்தவர்களுக்கு தெரிவிப்பேன். நான் எப்பொழுதும் சமுக வலைதளங்களில் முழுகி இருந்தேன் என்றாலும் எதிர்மனுதாரரை சரியாக கவனிக்கவில்லை என்றால் சரியல்ல.

16. நான், எதிர்மனுதாரரிடம் தொலைபேசியில் பேசிய பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது உண்மை முகம் தெரியும் என்றால் நான் தவறாக எதுவும் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் தாம்பத்தியத்தில்

பிரச்சனை உள்ளதாக வழக்கு தாக்கல் செய்து விட்டு என்னை தற்போது பாலியல் துன்புறுத்தல் செய்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகள் பொய்யானது என்றாலும் விவகரத்து பெறுவதற்காக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள விவாகரத்து வழக்கில் சென்ற வாய்தா தேதியில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை தொல்லை செய்ய வேண்டும் என்று அந்த மனுவை தாக்கல் செய்யதேன் என்றால் இல்லை.

14. நான் என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரிலும், எனது தந்தையின் தொழிலை பார்ப்பதற்கு அவருடன் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வேலை செய்து வருவதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை. நான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வந்தபிறகு வேலை செய்து ரூ.1.50 லட்சத்திற்கு இருசக்கர வாகனம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. நான் இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு ஓட்டிவந்த வாகனத்தின் மதிப்பு எவ்வளவு என்றால்  ரூபாய் 80 ஆயிரம். அதன் பதிவு எண்.1400. அந்த வாகனம் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. என்னுடைய  சேமிப்பு பணத்தில் இருந்து வாங்கினேன்.

15. நான் சுத்தமான கைகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை; இல்லை.

Taken down by me/before me

in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I
Arakkonam.